கோடையில் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்

அமைச்சர் தங்கம் தென்னரசு உத்தரவு

● சென்னை

கோடைகாலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மின்வாரிய தலைமைப் பொறியாளர்களுக்கு, அமைச்சர் தங்கம் தென்னரசு உத்தரவிட்டுள்ளார்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தில், மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், கோடைகாலத்தின் போது தமிழ்நாடு முழுவதும் சீரான மின்சார விநியோகம் வழங்குவது குறித்து, தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் காணொலி வாயிலாக நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில், வரும் கோடைகாலத்தில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மின்சாரத் தேவை குறித்தும், தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அனல், நீர், காற்றாலை, சூரிய மின்சக்தி மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தின் அளவு குறித்தும் அமைச்சர் கேட்டறிந்தார்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாத உச்சபட்ச மின் தேவை முறையே 18 ஆயிரம் மெகாவாட் மற்றும் 19,900 மெகாவாட் வரை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின் வாரியம் மூலம் 15,093 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. மீதமுள்ள மின் தேவையை மார்ச் மாதம் 3,571 மெகாவாட் மற்றும் ஏப்ரலில் 4,321 மெகாவாட் மின்சாரத்தை வெளிச்சந்தை, மின் பரிமாற்றம் மற்றும் குறுகியகால ஒப்பந்தம் மூலம் பெறப்படும். இதன் மூலம், மாநிலத்தின் கோடைகால மின் தேவை முழுமையாக பூர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் 10, 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகள் முடிவடையும் வரை மாதாந்திர பராமரிப்புக்கான மின் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டாம் என தலைமைப் பொறியாளர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். மேலும், மின்னகம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார். ஆய்வுக் கூட்டத்தில், மின்வாரிய தலைவர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மகாஜன், இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உயர்கல்வி, கூட்டு ஆராய்ச்சி தொடர்பாக அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழகம் – சென்னை போரூர் ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகம் இடையே நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அப்பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் உமா சேகரும், கொலராடோ பல்கலைக்கழக தலைவர் டாக்டர் ஆமி பார்சனும் ஒப்பந்த ஆவணங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்.

உயர்கல்வி, கூட்டு ஆராய்ச்சி

அமெரிக்க பல்கலைக்கழகத்துடன் ராமச்சந்திரா பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

● சென்னை

உயர்கல்வி மற்றும் கூட்டு ஆராய்ச்சி தொடர்பாக அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக் கழகத்துடன் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

பொறியியல் மற்றும் மருத்துவம் தொடர்பான படிப்புகளிலும், ஆராய்ச்சி பணிகளிலும் இணைந்து செயல்பட சென்னை போரூர் ராமச்சந்திரா பல்கலைக்கழகமும், அமெரிக்காவின் கொலராடோ மாநில பல்கலைக்கழகமும் முன் வந்துள்ளன. இதற்கான புரிந் துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திடும் நிகழ்ச்சி போரூர் ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கொலராடோ பல்கலைக்கழக தலைவர் ஆமி பார்சனும், ராமச்சந்திரா பல்கலைக் கழக துணைவேந்தர் உமா சேகரும் ஒப்பந்த ஆவணங்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத் தின்படி, பொறியியல், மருத்துவம், உயிரி-மருத்துவம், பொது சுகாதாரம், மருத்துவ நுண்ணுயிரியல் ஆகிய துறைகளில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து செயல்படும். ராமச்சந்திரா பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பிட்ட காலம் கொலராடோ பல்கலைக்கழகத்தில் படிக்கலாம். இங்குள்ள பேராசிரியர்களும் அங்கு பணியாற்றலாம். அதேபோல், கொலராடோ பல்கலைக் கழக மாணவர்கள் குறிப்பிட்ட காலம் ராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில் படிக்க முடியும். அதன் பேராசிரியர்களும் இங்கு பணியாற்றுவதுடன் ஆராய்ச்சி பணியிலும் ஈடுபடலாம்.

மேலும், வரும் காலத்தில் மறுவாழ்வு மருத்துவம், மூட்டு மருத்துவம், உயிரி-பொறியியல், காலநிலை மாற்றம், மரபணு, மூலக் கூறு அறிவியல் உள்ளிட்ட துறை களிலும் இணைந்து செயல்பட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வகை செய்யும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ராமச்சந்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் உமா சேகர் கூறும் போது, "எங்கள் பல்கலைக்கழகத்தில் 4 ஆண்டுக்கால இளநிலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் குறிப்பிட்ட காலம் கொலராடோ பல்கலைக்கழகத்தில் ஆன்லைன் வழியாகப் படிப்பார்கள். அதற்கேற்ப அவர்களுக்கு உரிய மதிப்பெண் வழங்கப்படும். இளநிலை படிக்கும் மாணவர்கள் விரும்பினால் 6 மாதம் முதல் 12 மாதம் வரை கொலராடோ பல்கலைக் கழகத்தில் ஆய்வுப் பணியில் ஈடுபடலாம்.

இந்த புதிய திட்டம் மூலம் எங்கள் மாணவர்கள் கொலராடோ பல்கலைக்கழகத்தில் முதுகலை படிப்பில் எளிதாகச் சேர முடியும். இரு பல்கலைக்கழக பேராசிரியர்களும் ஸ்டெம் செல், இனப்பெருக்க மருத்துவம், பயோ-மெட்டீரியல், காலநிலை மாற்றம், உயிரி பொறியியல் உள்ளிட்ட துறைகளில் ஆய்வு மேற்கொள்ளலாம். ஆசிரியர்-மாணவர் பரிமாற்றம் திட்டம் வரும் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்" என்றார்.

கூட்டுப் படிப்புகள் மற்றும் அவற்றுக்கான பாடத்திட்டம் குறித்து பல்கலைக்கழக டீன் (ஆராய்ச்சி) கல்பனா பாலகிருஷ்ணன் எடுத்துரைத்தார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் எங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உயர்தர கல்வி கிடைக்கப் பெரிதும் உதவும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் கோரி வழக்கு

ஒரு வாரத்தில் பதிலளிக்க வேண்டும்

தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

● சென்னை

மக்களவைத் தேர்தலில் மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் ஒதுக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில், தேர்தல் ஆணையம் பரிசீலித்து, ஒரு வாரத்தில் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, மதிமுக சார்பில் கட்சியின் பொதுச் செயலாளரான வைகோ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது:

கடந்த 1996-ம் ஆண்டு முதல் மதிமுகவுக்கு அனைத்து தேர்தல்களிலும் பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது. கடந்த 2006-ம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 5.99 சதவீத வாக்குகள் பெற்றிருந்த நிலையில் 5.98 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளதாகக் கூறி எங்களது கட்சிக்கான அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

அதன்பிறகு கடந்த 2014-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் எங்களது கட்சிக்கு பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது. எனவே எதிர்வரும் தேர்தலிலும் மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் இவ்வாறு மனுவில் கோரியிருந்தார்.

> கடந்த 1996-ம் ஆண்டு முதல் மதிமுகவுக்கு அனைத்து தேர்தல்களிலும் பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது.

இந்த மனு, நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வைகோ தரப்பில் மூத்த வழக்கறிஞர் அஜ்மல்கான் ஆஜராகி, "மக்களவைத் தேர்தல் தேதி எப்பொழுது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம் என்பதால் எங்களது விண்ணப்பத்தை விரைவாக பரிசீலிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்றார்.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன், "இதுதொடர்பாக பதிலளிக்க ஒருவாரம் அவகாசம் வேண்டும்" என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், "மதிமுக சார்பில் அளிக்கப்பட்ட மனுவை பொதுச் சின்ன ஒதுக்கீட்டின் அடிப்படையில் பரிசீலித்து, பதிலளிக்க வேண்டும்" என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 7-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளனர்.

விபத்துக்குள்ளான காங். பெண் நிர்வாகி மரணம் செல்வப்பெருந்தகை இரங்கல்

● சென்னை

விபத்தில் சிக்கி உயிரிழந்த காங்கிரஸ் கட்சியின் பெண் நிர்வாகிக்கு, கட்சியின் தலைவர் கு.செல்வப்பெருந்தகை இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளரும், சமூக செயற்பாட்டாளருமான கவுரி கோபால், சென்னை பூந்தமல்லியில் வசித்து வந்தார். கடந்த பிப்.21-ம் தேதி கட்சியின் மாநில தலைவராக கு.செல்வப்பெருந்தகை பொறுப்பேற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார். பின்னர், வேறு ஒரு நிகழ்ச்சிக்காக சென்றுவிட்டு வீடு திரும்பும்போது பட்டாபிராம் அருகே கார் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தார்.

ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கவுரி கோபால், நேற்று உயிரிழந்தார். இதையடுத்து தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, நேற்று மாலை கவுரி கோபால் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியில், 'கவுரி கோபால், காங்கிரஸ் மீது அளவற்ற பற்று கொண்டவர். தலைமை கட்டளையிடும் அனைத்து போராட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும் மிகுந்த ஆர்வத்தோடு பங்கேற்கும் ஒரு போராளி. அவரது மறைவு காங்கிரஸ் கட்சிக்கும், தொண்டர்களுக்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும்' என தெரிவித்துள்ளார்.

ரேடியல் சாலையில் உள்ள காவேரி மருத்துவமனையில் மா காவேரி கருத்தரிப்பு மையத்தை தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. தொடங்கி வைத்தார். காவேரி குழும நிறுவனர் மற்றும் நிர்வாக தலைவர் மருத்துவர் எஸ்.சந்திரகுமார், இயக்குநர் மருத்துவர் பி.எம்.கோபிநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ரேடியல் சாலை காவேரி மருத்துவமனையில்

'மா காவேரி கருத்தரிப்பு மையம்' தொடக்கம்

● சென்னை

ரேடியல் சாலையில் உள்ள காவேரி மருத்துவமனை, கருத்தரித்தல் மற்றும் கருவுறுதல் தொடர்பான பிற சிக்கல்களை எதிர்கொள்ளும் தம்பதிகளுக்கு சிறந்த மருத்துவ ஆலோசனை வழங்குவதற்காக மா காவேரி கருத்தரிப்பு மையத்தை தொடங்கி உள்ளது.

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், புதிய அதிநவீன மையத்தைத் திறந்துவைத்து, "குழந்தை பெற விரும்பும் தம்பதிகளுக்கு தொழில்நுட்பத்துடன் கூடிய மா காவேரி கருத்தரிப்பு மையம், உறுதியான நம்பிக்கையை கொடுத்துள்ளது" எனப் பாராட்டினார்.

கருத்தரிப்பு மையமானது முழு வசதியுடன் கூடிய கரு ஆய்வகம், அதிநவீன அறுவை சிகிச்சை அரங்குகள், மேம்பட்ட நோய் கண்டறியும் கருவிகள் மற்றும் நவீன உள்கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது இன்ட்ரா கருப்பை கருவூட்டல் (IUI), இன் விட்ரோ கருத்தரித்தல் (IVF) மற்றும் இன்ட்ராசைட்டோ பிளாஸ்மிக் விந்தணு ஊசி (ICSI) போன்ற உதவி இனப்பெருக்க தொழில் நுட்ப சிகிச்சைகளை வழங்குகிறது.

கூடுதலாக, இந்த மேம்பட்ட கருத்தரிப்பு மையம், கர்ப்பத்தின் வெற்றி விகிதத்தை மேம்படுத்துவதற்காக உணவுமுறை, எடை கட்டுப்படுத்தல், மனநல ஆலோசனை போன்றவற்றை வழங்குவதற்கான சிறப்பு மருத்துவ வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

காவேரி குழும மருத்துவமனைகளின் நிறுவனர் மற்றும் நிர்வாக தலைவர் மருத்துவர் எஸ்.சந்திரகுமார் கூறும்போது, "தம்பதிகளுக்குச் சிறந்த தரமான சிகிச்சைகளை வழங்குவதே எங்கள் முன்னுரிமை. புதிதாகத் தொடங்கப்பட்ட எங்களின் மேம்பட்ட கருத்தரிப்பு மையம், பெற்றோர் ஆக விரும்பும் தம்பதிகளுக்கு உதவிகரமாக அமையும். மா காவேரி கருவுறுதல் மையம், அன்பான கவனிப்பின் மூலம் தம்பதிகளுக்கு நம்பிக்கையும், மிகச் சிறந்த ஆதரவையும் அளிக்கும்" என்றார்.

27 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்பெற்றதுறைமுன்னோடியான, மா காவேரி கருத்தரிப்பு மையத்தின் இயக்குநரும் மருத்துவருமான பி.எம்.கோபிநாத் கூறும்போது, "மா காவேரி கருத்தரிப்பு மையம் நவீனத் தொழில் நுட்பத்தையும், அன்பான கவனிப்பையும் வழங்குகிறது.

கருத்தரிப்பதில் சிக்கல்கள் உள்ளவர்களுக்கு கருத்தரிப்பதற்கான சிறந்த மற்றும் மேம்பட்ட கருவுறுதல் நுட்பங்களை நாங்கள் வழங்குகிறோம். சர்வதேச தரத்துக்கு இணையாக மிக உயர்ந்த தரமான பராமரிப்பை வழங்க இந்த மையம் தயாராக உள்ளது" என்றார்.

கடலூர் திமுக எம்.பி. மீதான கொலை வழக்கு

விசாரணையை முடிக்க மேலும் 6 மாதம் அவகாசம்

உயர் நீதிமன்றம் உத்தரவு

● சென்னை

கடலூர் திமுக எம்.பி., டி.ஆர். வி.ரமேஷுக்கு சொந்தமான முந்திரி ஏற்றுமதி நிறுவனத்தில் பணியாற்றி வந்த பண்ருட்டி மேல்மாம்பட்டைச் சேர்ந்த தொழிலாளி கோவிந்தராசு என்பவர் கடந்த 2021 செப்டம்பரில் கொலை செய்யபட்டார். இந்த கொலை வழக்கில் திமுக எம்பி ரமேஷ் உள்ளிட்ட 6 பேரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை கடலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், இந்த விசாரணை முறையாக நடைபெறவில்லை என்றும், சாட்சிகள் மிரட்டப்படுவதாகவும் இறந்த கோவிந்தராசுவின் மகன் செந்தில்வேல் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த வழக்கை செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றி கடந்தாண்டு ஜூலையில் உத்தரவிட்டது. மேலும் 6 மாத காலத்துக்குள் வழக்கை விசாரித்து முடிக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது செந்தில்வேல் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சசிக்குமார், உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் கடந்த 6 மாதத்தில் ஒரு சாட்சியைக் கூட செங்கல்பட்டு நீதிமன்றம் விசாரிக்கவில்லை என்றும், இந்த வழக்கை விரைந்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் எனவும் கோரினார்.

போலீஸார் தரப்பில், இந்த வழக்கு விசாரணையை முடிக்க மேலும் கூடுதல் கால அவகாசம் தேவை எனக் கோரப்பட்டது.

அதையேற்ற நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை முடிக்க மேலும் 6 மாதம் கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

VISTAAR FINANCE
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மனை எண். 59 & 60- 23, 22வது குறுக்கு, 29வது பிரதான, BTM லே அவுட் ஸ்டேஜ் 2, பெங்களூரு-560076. www.vistaarfinance.com

இணைப்பு - IV [விதி - 8(1) பார்க்கவும்]
சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக)

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி **கடன்தாரர்(கள்) திரு/திருமதி. மகேந்திரன் ஆறுமுகம், திரு/திருமதி. வசந்தி மகேந்திரன், திரு/திருமதி. ஆறுமுகம் V & திரு/திருமதி கஸ்தூரி முருகேசன்** ஆகியோருக்கு **28.11.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை** அனுப்பி கடன் கணக்கு எண். **0031SBML02369** க்கு எதிரான **27.11.2023** அன்றைய தேதியில் நிலுவை தொகை **ரூ.21,57,965.30/- (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்து மற்றும் பைசா முப்பது மட்டும்)** அத்துடன் மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் இதர உண்மையான தொகை வரை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்(கள்) பாக்கித்தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டபடியால், கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது கீழ்குறிப்பிட்ட பாதுகாப்பு நகன் (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்-பட்டுள்ள சொத்தினை **01.03.2024** தேதியன்று **பிசிக்கல் சுவாதீனம்** செய்துள்ளார்.

கடன்தாரர்(கள்)க்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எந்தவித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்**-க்கு செலுத்த வேண்டிய **27.11.2023** அன்றைய தேதியில் பாக்கித்தொகை **ரூ.21,57,965.30/- (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்து மற்றும் பைசா முப்பது மட்டும்)** அத்துடன் மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் இதர உண்மையான தொகை வரை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுபட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13-ன் துணைபிரிவு (8)ன்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்தின் விவரம் :

அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் இணை 2 சார் பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, புதுப்பாளையம் தெரு, டவுன் ச.எண். 1054/2, 1054/4, அளவுகள் 1108.75 சதுர அடி பரப்பு மற்றும் **அயிட்டம் எண்.1-ன் நான்கு எல்லைகள் :** வடக்கில் - கன்னியப்பன் வீடு, தெற்கில் - சிற்றம்பலம் முதலியார் தெரு, கிழக்கில் - அனபந்தன் பிள்ளையார் தோப்பு, மேற்கில் - புதுப்பாளையம் தெரு. **அயிட்டம் எண்.2-ன் நான்கு எல்லைகள் :** வடக்கில் - கன்னியப்பன் வீடு, தெற்கில் - கனகசபை முதலியார் தெரு, கிழக்கில் - D நடராஜன் நிலம், மேற்கில் - லட்சுமி அம்மாள் பாலு நடராஜன் காலி நிலம்.

நாள் : 01.03.2024
இடம் : காஞ்சிபுரம்
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

Repco Home Finance
ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: அலெக்சாண்டர் ஸ்குயர், 3ஆவது தளம், எண்.2, (பழைய எண்.34 & 35), சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. போன்: 044-42106650; ஃபாக்ஸ்: 044-42106651

இ - ஏல விற்பனை அறிவிப்பு

ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் விற்பனை கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள், சக-கடன்தாரர்கள் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், **Asset Recovery** கிளையில் கீழ்க்கண்ட தபஸில் உள்ள சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார்கள். மேற்படி கடன்தாரருக்கு SARFAESI ACT-ன்படி கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது / அறிவிப்பில் கண்ட கடன் தொகை, வட்டி, இதர செலவுகளையும் கடன்தாரர்கள் கட்ட தவறியதால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ள அடமான சொத்துக்களை **SARFAESI ACT**-ன்படி கையகப்படுத்தி மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளிட்ட விற்பனை அறிவிப்பு அனுப்பியுள்ளார் மற்றும் அந்த சொத்துக்களை "எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையில் உடன்படிக்க பிரிவு 8 & 9 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002-ன்கீழ் கம்பெனி விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளது.

இ-ஏலம் நடைபெறும் நாள் : 22-03-2024, நேரம் : காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை
விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்.
இ-ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் & நேரம் : 21.03.2024 மாலை 04.00 மணிக்குள்

வ.எண்.1: (ARB-சென்னை கிளை) கடன்தாரர்: திரு.P.செந்தில் குமார், த/பெ.S.தங்கதுரை, **சக-கடன்தாரர்: திருமதி.S.ஜேயசுதா,** க/பெ.P.செந்தில் குமார்; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 18-09-2019**; **கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை (கடன் கணக்கு எண்.2571811000492 & 2571880000576) 12-09-2019** அன்றுள்ளபடி ரூ.**26,87,326/-** & ரூ.**5,28,625/-** மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள், **சுவாதீனம் எடுத்த தேதி: 29-01-2020** தற்போதைய கடன் நிலுவைத் தொகை: **21-02-2024** அன்றுள்ளபடி **ரூ.46,57,759/-** & **ரூ.10,04,740/-**

அசையா சொத்துக்கள் விவரம்: அனைத்து துண்டு மற்றும் கட்டிடத்துடன் கூடிய நிலம் அமைந்துள்ள ப்ளாட் எண். 8ஐத் தாங்கிய 1323 சதுர அடி அளவிலான பெருமாள்புரம் விரிவாக்கத்தில் அனைத்தும் சர்வே எண். 803ல் (பட்டா எண். 4666, ச.எண்.803/7 இன் படி & 804/2A (பட்டா எண். 4667 சர்வே எண். 804/2A1D இன் படி பாக்கம் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் லேஅவுட் PPD/LO/எண்.11/92 இன் படி அங்கீகரிக்கப்பட்டு:- **எல்லைகள் : வடக்கு:** வடக்கு பகுதி ப்ளாட் எண். 8, காலி நிலம். **கிழக்கு :** ப்ளாட் எண். 7. **தெற்கே:** பிளாட் எண். 9. **மேற்கு:** 24 அடி சாலை. **அளவீடு:-** வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக: 43 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 44.6 அடி. கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே : 31 அடி. மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே : 29.6 அடி. இது திருவள்ளூர் துணைப் பதிவு மாவட்டத்திலும், காஞ்சிபுரத்தின் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.33,80,000/-; முன்வைப்புத் தொகை (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) : ரூ.3,38,000/-; குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை : ரூ.25,000/-

இ-ஏலம் நடைபெறும் நாள் : 19.03.2024, நேரம் : காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை
விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்.
இ-ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் & நேரம் : 18.03.2024 மாலை 04.00 மணிக்குள்

வ. எண். 2: (கேளம்பாக்கம் கிளை): கடன்-தாரர்: திரு.R.சிவகுமார், த/பெ. திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் **சக-கடன்தாரர்: திரு.K.ராதாகிருஷ்ணன்,** த/பெ. திரு.குருவ ராஜா **கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.08.2021; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை (கடன் கணக்கு எண்.2151870000165) 06.08.2021 அன்றுள்ளபடி ரூ.1,01,05,021/-** மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள், **சுவாதீனம் எடுத்த தேதி: 17.11.2021, தற்போதைய கடன் நிலுவைத் தொகை: 27.02.2024 அன்றுள்ளபடி ரூ.1,44,94,083/-**

அசையா சொத்துக்கள் விவரம்: அனைத்து துண்டு மற்றும் கட்டிடத்துடன் கூடிய நிலம் அமைந்துள்ள க.எண்.3/6, மகாத்மா காந்தி தெரு, இப்போது திரு நகர் 3வது தெரு, வடபழனி, சென்னை - 600026, பைமாஷ் எண்கள். 120 முதல் 125 வரை, பிளாக் எண்.2, டி.எஸ்.எண்.3/11, 1020 சதுர அடி மீட்டர் பரப்பளவு கொண்ட எண்.9, புலியூர் கிராமம், எழும்பூர் - நுங்கம்பாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம் எல்லையில் அமைந்துள்ளது: வடக்கே : மகாத்மா காந்தி தெரு (தற்போது திரு நகர் 3வது தெரு), தெற்கு: பிளாட் எண். 17, கிழக்கு: பிளாட் எண். 10, மேற்கே : பிளாட் எண். 9A. கோம்பாக்கத்தின் துணைப் பதிவு மாவட்டத்திலும், தென் சென்னையின் பதிவு மாவட்டத்திலும் உள்ளது